பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
09 09 2026 WEDNESDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இலங்கை சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று அந்நாட்டு அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே-வை சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்தவுள்ளார்.
- சர்வதேச அளவில் விளையாட்டு வீரர்கள் சாதனை படைப்பதற்கான சூழலை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
- கடற்படை தளபதி அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன், ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து நாடுகளுக்கு இன்று பயணம் மேற்கொள்கிறார்.
- நாட்டின் ஆட்டோமொபைல் விற்பனை கடந்த மாதத்தில், 17 புள்ளி ஐந்து ஒன்று சதவீதம் அதிகரித்துள்ளது.
- யுக்ரைன் மோதலை முடிவுக்கு கொண்டுவர, இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கப்படும் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

இலங்கை சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், அந்நாட்டு அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே-வை இன்று சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்தவுள்ளார்.

மூன்று நாள் பயணமாக இலங்கை சென்றுள்ள திரு. ராஜ்நாத் சிங், அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சரையும் சந்தித்து, இந்தியாவுடனான நல்லுறவுகளை மேம்படுத்துவது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, நேற்று கொழும்புவில் இந்திய வம்சாவளியினரிடையே பேசிய திரு. ராஜ்நாத் சிங், இலங்கையுடனான நட்புறவை வலுப்படுத்துவதில், இந்தியர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்த் என்று கூறினார்.

இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே ஒரு பாலமாக இந்திய வம்சாவளியினர் திகழ்வதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நெருக்கடி ஏற்படும் போதெல்லாம், அந்நாட்டிற்கு இந்தியா உறுதியுடன் துணை நின்றுள்ளதாகவும் திரு. திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

9-வது தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தை, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி வாரணாசியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் பங்கேற்கிறார்.

அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், பஞ்சாயத்துகள் மற்றும் நாடுமுழுவதும் உள்ள அனைத்து வீடுகளிலும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை இந்த மாதம் முழுவதும் ஏற்படுத்தும் வகையில், இந்த இயக்கம் தொடங்கப்படுகிறது.

“நமது அங்கன்வாடி – நமது பொறுப்பு” என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு ஊட்டச்சத்து மாதம் கடைபிடிக்கப்படுகிறது.

>>>>>><<<<<<

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள 503 பேர் கொண்ட இந்திய குழுவினர், புதுதில்லியிலிருந்து நேற்று ஜப்பான் புறப்பட்டுச் சென்றனர்.

அவர்களை விமான நிலையத்தில் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பி.டி. உ□ா உள்ளிட்டோர் வழியனுப்பி வைத்தனர்.

முன்னதாக இந்திய அணியினருக்கான அதிகாரப்பூர்வ Jersey அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

அப்போது பேசிய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, இந்திய வீரர், வீராங்கனைகள் வாய்ப்புகளை சாதனைகளாக மாற்றுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

உலக அளவில் நமது வீரர்கள் போட்டியிட்டு, சாதனை படைப்பதற்கு ஏற்ற சூழலை பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு ஏற்படுத்தி கொடுத்திருப்பதாக அவர் கூறினார்.

இதன்மூலம் விளையாட்டுத் துறையில் இந்திய இளைஞர்களின் திறமை வெளிப்பட்டு வருவதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கடற்படை தளபதி அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன், ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

இந்த பயணத்தின் போது, அந்நாடுகளின் கடற்படை மற்றும் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளை சந்தித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

நியூஸிலாந்து கடற்படை வீரர்களுடன் அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன் கலந்துரையாடவுள்ளதாகவும் இந்திய கடற்படை வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

நாட்டின் ஆட்டோமொபைல் விற்பனை கடந்த மாதத்தில், 17 புள்ளி ஐந்து ஒன்று சதவீதம் அதிகரித்துள்ளது.

அதன்படி, சுமார் 24 லட்சத்து 23 யூனிட் அளவிலான கார்கள் உள்ளிட்ட வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டிருப்பதாக ஆட்டோமொபைல் டீலர்கள் சம்மேளனத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

CNG, மின்சாரம் மூலம் இயங்கும் மாற்று எரிபொருள் வாகனங்களின் விற்பனையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

முதன்முறையாக பெட்ரோல் மூலம் இயங்கும் வாகனங்களை காட்டிலும், மாற்று எரிபொருள் வாகனங்களின் விற்பனை கடந்த மாதத்தில் 42 சதவீதம் அதிகரித்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியாவும், குவைத்தும் பல்வேறு துறைகளில் நல்லுறவுகளை வலுப்படுத்த ஒப்புதல் தெரிவித்துள்ளன.

குவைத்தில் நேற்று நடைபெற்ற 8வது இந்திய – குவைத் வெளியுறவு அமைச்சக அளவிலான ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

வெளியுறவுத்துறை கூடுதல் செயலாளர் திரு. ஆசிம் மஹாஜன் மற்றும் குவைத்தின் ஆசிய விவகாரங்களுக்கான வெளியுறவு துணைமைச்சரும் திரு. *Nawaf Abdullatif Al Ahmed* ஆகியோர் இந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்தனர்.

அரசியல் ரீதியிலான உறவுகள், வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம், வேளாண்மை உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவது என்று இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

ஐரோப்பிய நாடுகளில் ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கம் இல்லை என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின், அமெரிக்க அதிபரிடம் உறுதியளித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டோனல்ட் ட்ரமப்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய திரு. புட்டின், ஐரோப்பிய அதிகாரிகள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் உண்மையல்ல என்று தெரிவித்தார்.

இதனிடையே அமெரிக்க தூதர்கள் *Kyiv* நகரில் தம்மை சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையில், ரஷ்யாவுடனான நான்கரை ஆண்டுகால போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான சாதகமான அம்சங்களை தெரிவித்ததாக யுக்ரைன் அதிபர் வோலடிமிர் ஜெலன்ஸ்கி கூறினார். அமெரிக்க அதிபரை விரைவில் தாம் சந்தித்து, இதுதொடர்பாக அடுத்த கட்ட பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யுக்ரைன் மற்றும் மேற்கத்திய நாடுகளின் பார்வையாளர்கள் போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக அண்மையில் அந்நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கியை சந்தித்து பேசினர். தொடர்ந்து அவர்கள் மாஸ்கோ சென்று புட்டினுடனும் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

>>>>>><<<<<<

யுக்ரைன் மோதலை முடிவுக்கு கொண்டுவர, இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கப்படும் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

யுக்ரைன் மோதலுக்கு, அமைதி பேச்சுவார்த்தை மற்றும் ராஜீயரீதியில் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

*இந்த நிலைப்பாடு, ரஷ்யாவின் யுக்தியுடன் ஒருங்கிணைந்திருப்பதாக புதுதில்லியில் நேற்று நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டுக்கு முந்தைய காணொலி மூலமான செய்தியாளர்கள் சந்திப்பின்போது Kremlin மாளிகை செய்தி தொடர்பாளர் Dmitry Peskov தெரிவித்துள்ளார்.*

*பிரிக்ஸ் உச்சிமாநாட்டிற்கிடையே, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினும், பிரதமர் திரு. நரேந்திர மோடியும் இருதரப்பு பேச்சுகள் நடத்துவார்கள் என்பதை அவர் உறுதி செய்தார்.*

*இருநாடுகளுக்கும் இடையே பரஸ்பர வாய்ப்புகளை வழங்குவது தொடர்பாக இரு தலைவர்களும் விரிவான ஆலோசனை நடத்துவார்கள் என்றும் Dmitry Peskov தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*பாதுகாப்பான 6-ஜி நெர்வொர்க்கின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில், அமெரிக்கா தலைமையிலான உலகளாவிய கூட்டமைப்பில் இந்தியா இணைந்துள்ளது.*

*இதற்கான முன்முயற்சியில் இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் ஜப்பான் நாடுகளும் ஈடுபட்டிருப்பதாக அமெரிக்க வர்த்தகத் துறை வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*வரும் 2030ஆம் ஆண்டில் 5-ஜி நெட்வொர்க்கிற்கு பதிலாக, 6-ஜி தொழில்நுட்பம் பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அதற்கான உத்திகளை முன்கூட்டியே ஒருங்கிணைக்க இந்த அமைப்பு உதவும் என்று அமெரிக்க வர்த்தகத் துறை தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*சத்திஷ்கடில் பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்தியது தொடர்பான வழக்கில் மாவோயிஸ்ட் அமைப்பைச் சேர்ந்த 5 பேருக்கு Kanker நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.*

*Dandakaranya சிறப்பு மண்டல குழுவைச் சேர்ந்த பிரபாகர் மற்றும் அவரது மனைவி ராஜி ஆகியோருக்கு தலா 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.*

மற்ற 3 பேருக்கு ஐந்தாண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

>>>>>><<<<<<

அஹமதாபாதில் நடைபெற்று வரும் உலக பாரா வில்வித்தை போட்டியில், தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களுக்கான ஆட்டங்களில் இந்திய வீரர்கள் இன்று பங்கேற்கவுள்ளனர்.

கலப்பு குழு இறுதிப் போட்டியில், பாவ்னா - ஹர்வீந்தர் சிங் இணை, சீன இணையை எதிர்கொள்கிறது.

இதேபோல், மகளிர் தனிநபர் பிரிவு இறுதிப்போட்டியில் ஷீத்தல் தேவி, கஜகஸ்தான் நாட்டு வீராங்கனையை எதிர்கொள்கிறார்.

கலப்பு குழு பிரிவில் ஷீத்தல் தேவி - டோமன் குமார் இணை, ஈராக் இணையுடன் மோதுகிறது.

மகளிர் பிரிவு வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில், இந்தியாவின் ராஜஸ்ரீ ரன்ராஜ் ரத்தோட், பாவ்னாவை எதிர்கொள்கிறார்.

>>>>>><<<<<<